Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, ANNUR.

Case No. C.C.No.43 /2024

Deposition of witness for Prosecution – P.W.3 Date : 06.03.2026

| | | | |
|---|---|---|---|
| Name : | கருப்புசாமி | Village : | அன்னூர் |
| Father's Name : | முத்துச்சாமி | Taluk : | அன்னூர் |
| Age : | 54 | District : | கோவை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 06th day of March 2026 **(All Accused absent.)**

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை**

நான் தற்போது அன்னூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் அரசுதரப்பில் விசாரணை செய்யப்பட்ட பாதிக்கப்பட்ட சாட்சி மற்றும் கண்ணுற்ற சாட்சி இருவரும் பிறழ்சாட்சிகளாக மாறியுள்ளதாலும், புலன் விசாரணை அதிகாரி தற்போது சென்னையில் பணிபுரிந்து வருவதாலும் வழக்கினை விரைந்து முடிக்கவேண்டி இவ்வழக்கில் காவல் நிலைய கோப்பு ஆவணங்கள் அடிப்படையில் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 26.10.2023 ம் தேதி மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று நிலைய தலைமை காவலர் கார்த்திகேயன் என்பவர் அங்கு சென்று சிகிச்சையில் இருந்த புகார்தாரர் செல்வகணேஷ் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து அன்னூர் காவல் நிலைய குற்ற எண். 750/2023 ச.பி. 147, 148, 294(b), 323, 324, 342 மற்றும் 506 (ii) ஆகிய பிரிவுகளின் கீழ் எதிரிகளுக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். (**அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின் இந்த வழக்கு விசாரணையினை எடுத்துக்கொண்ட காவல் உதவி ஆய்வாளர் திரு. சிவக்குமார் அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் விக்னேஷ் மற்றும் தமிழரசன் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். (**அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் இவ்வழக்கு பட்டியல் சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் மற்றொரு சம்பவ இடமான குரும்பப்பாளையம் பத்மா ஸ்டீல் பின்புறம் உள்ள இடத்தினை அன்றைய தினமே சாட்சிகள் முத்துச்சாமி மற்றும் முத்துச்செல்வி ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு விசாரித்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். (**அந்த இரண்டாவது பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ. 5 மற்றும் 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) இவ்வழக்கின் வழக்கு சொத்துக்களான கார், பச்சை நிற ஓஸ், ஸ்டீல் மாப் ஆகியவற்றை சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றி சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். (**அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) இவ்வழக்கின் எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு முன்னிலைப்படுத்தி படிவம் 91ன் மூலம் வழக்குச் சொத்துக்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். (**அந்த படிவம் 91 அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) இவ்வழக்கு சம்பவத்தில் காயம் அடைந்த செல்வகணேஷன் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றுள்ளார். (**அந்த காயச்சான்று அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) இவ்வழக்கின்

வழக்குச்சொத்தான கருப்பு நிற பொலிரோ கார் இடைக்கால பொறுப்பில் அதன் உரிமையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன் போட்டோ உரிமையாளரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (**அந்த ஒளிப்பட நகல் அ.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) தற்போது நீதிமன்றத்தில் உள்ள ஸ்டீல் மாப் மற்றும் பச்சை நிற ஓஸ் இந்த வழக்கில் தொடர்புடையது தான். (**அந்த வழக்கு சொத்துக்கள் இரண்டும் முறையே அ.சா.பொ. 1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் வழக்கு சொத்தின் விசாரணை முடித்து எதிரிகளுக்கு எதிராக இ.த.ச. பிரிவுகள் 147, 148, 294(b), 323, 324, 342 மற்றும் 506 (ii) ஆகிய பிரிவுகளின் கீழ் எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

புகாரில் கண்டுள்ளது போல் புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் எவ்வித பிரச்சனையும் இல்லை என்று சொன்னால் தவறு. இவ்வழக்கின் சாட்சிகள் அனைவரும் புகார்தாரரின் உறவினர்கள் என்றால் தவறு. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. குற்ற இறுதி அறிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது போல் எதிரிகள் எந்த தவறும் செய்யவில்லை என்றும் அவர்கள் நிரபராதிகள் என்று சொன்னால் தவறு.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.

S/d.V.Monika
District Munsif Cum Judicial Magistrate
Annur